MISSION PRESS 1840
PONDICHERRY

# சர்வவியாபி

SARVA VIABI

ESTD:1.3.1907
(Year-115)

| 12-06-2022 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | சுபகிருது வருடம் (வைகாசி 29) | வருட சந்தா ₹ 200 தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

புத்தகம் 59 | இதழ் 22 | பக்கம்-12
e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360
ஆசிரியர் : பேரருள்பணி ஆ. அருளானந்தம்
துணை ஆசிரியர் : அருள்பணி L.ஆரோக்கியதாஸ்

## உணவை, போரின் ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டாம்

**உக்ரைன் நாட்டில் ஏறத்தாழ நூறு நாள்களாக இடம்பெற்றுவரும் போரினால், உலக அளவில் தானியப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது குறித்து, தன் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ள திருத்தந்தை, போரின் ஆயுதமாக உணவு பயன்படுத்தப்படக்கூடாது என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.**



ஜூன் 01, புதன் காலையில், வத்திக்கானின் புனித பேதுரு வளாகத்தில் அமர்ந்திருந்த மக்களுக்கு, முதுமை குறித்த புதன் பொது மறைக்கல்வியுரையின் 12வது பகுதியை வழங்கியபின்னர், உக்ரைனிலிருந்து கோதுமை ஏற்றுமதி தடைசெய்யப்படுவது நிறுத்தப்படுமாறு அழைப்புவிடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

"உணவு பெறுவதற்குரிய உலகளாவிய உரிமைக்கு உறுதி வழங்கப்பட எல்லாவிதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். உக்ரைனிலிருந்து கோதுமை ஏற்றுமதி தடைசெய்யப்படுவது மிகுந்த கவலையளிக்கின்றது. இந்த உணவு தானியத்தை நம்பியே, உலகில் இலட்சக்கணக்கான மக்கள், குறிப்பாக, மிக வறிய நாடுகளின் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.



உலகில் இலட்சக்கணக்கான மக்கள் நம்பி வாழ்கின்ற முக்கிய உணவாகிய கோதுமையை, போரின் ஆயுதமாகப் பயன்படுத்தவேண்டாம். உக்ரைனை இரஷ்யா ஆக்ரமித்ததிலிருந்து, உக்ரைன் நாட்டில் தொடர்ந்து இடம்பெற்றுவரும் போரால் உலகெங்கும் இந்த கோதுமை உணவுப் பற்றாக்குறை உருவாகியுள்ளது.

உக்ரைனில் அமைதி நிலவவேண்டும் என்றும், உக்ரைன் மற்றும் உலகின் மற்ற பகுதிகளில் இடம்பெற்றுவரும் போர்கள் முடிவுக்கு வரவேண்டும்" என்றும் வேண்டுகோள் விடுத்தார் திருத்தந்தை.

மே 31, செவ்வாய் மாலையில், உரோமையிலுள்ள மரியன்னை பெருங்கோவிலில், அமைதியின் அரசியாம் அன்னை மரியாவிடம் உலக சமுதாயத்திற்கு அமைதி எனும் கொடையை நல்குமாறு உருக்கமாகச் செபித்தார் திருத்தந்தை.

மேலும், இவ்வாண்டு மார்ச் மாதம் 25ம் தேதி, வத்திக்கானின் புனித பேதுரு பெருங்கோவிலில், மனித சமுதாயம் முழுவதையும், குறிப்பாக இரஷ்யாவையும், உக்ரைனையும் அன்னை மரியாவின் மாசற்ற திரு இதயத்திடம் திருத்தந்தை அர்ப்பணித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### உப்பளம் புனித சவேரியார் மேய்ப்புப் பணி மையத்தில் குணமளிக்கும் நற்செய்தி ஆராதனை கூட்டம்

**குடும்ப ஆசீர்வாத தியானம் - 2022**

**ஜூன் 17 முதல் 19 வரை தினமும் காலை 09.30 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை**

தொடங்கி வைப்பவர் : அருட்பணி **K. A. இயேசு நசரேன்,** இயக்குநர்,
புனித அவிலா தெரேசம்மாள் ஆன்மீக மையம், உசுட்டேரி

வழி நடத்துபவர் : அருட்பணி **ஆரோன்,** சிவகங்கை "புதிய இதயம் தியானக்குழு"

நிறைவுத் திருப்பலி : மேதகு **பிரான்சிஸ் க-ஸ்ட்,** பேராயர், புதுவை - கடலூர் உயர் மறைமாவட்டம்.

*அனைவரும் திரண்டு வாரீர்! இறையருளை பெறுவீர்.*

**இவண்**

**அருட்பணி A. J. பிலோமின்தாஸ் மற்றும் சவேரியார் மைய ஜெப தயாரிப்பு குழுவினர்.**
**நற்செய்தி அறிவிப்பு மற்றும் அருங்கொடை புதுப்பிப்பு பணிக்குழுக்கள்.**

ஆசிரியர் மேசை...

# நம்பிக்கையில் உறுதி வாழ்வில் சமத்துவம்

இந்தியா, மதச் சார்பற்ற ஜனநாயக நாடு, என்பதை அண்மைக் காலம் வரை உலகுக்கு அறிவிப்பதோடு செயல்படுத்தியும் வந்திருப்பது உலகளவில் இந்தியர் நமக்கு பெறுமை. கொள்கையின் அடிப்படையில் சில கட்சிகள், மத சார்பற்ற தன்மையை எதிர்த்து பேசுவதையும், செயல்படுவதையும் ஆட்சியாளர்கள் கண்டுகொள்ளாமல் முளையிலேயே கிள்ளி எறியாத இத்தகைய பேச்சுக்களால் உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் இந்துக்கள் இஸ்லாமியர் இடையே கலவரம் ஏற்பட்டதை ஊடகத்துறை வெளியிட்டது. நபிகள் நாயகத்தைபற்றி தவறான வார்த்தைகளை பயன்படுத்தி கடுமையாக பேசியதே கலவரத்திற்கு காரணமாக சொல்லப்படுகிறது.

இச்செயலுக்காக இந்திய அரசு பொது மன்னிப்பு கேட்கவேண்டும்; இந்திய பொருட்களை புறக்கணிக்க வேண்டும் என்று இஸ்லாமிய நாடுகள் வ-யுறுத்தின. விளைவு, இந்தியா தலைகுனிய வேண்டியதாயிற்று. பாஜக அனைத்து மதங்களையும் மதிக்கிறது, எந்த மதத்தை சேர்ந்த தலைவர்களையும் விமர்ச்சிப்பதை பாஜக ஏற்றுக் கொள்ளாது. அதேபோல் எந்த பிரிவையும், மதத்தையும் இகழ கூடிய கொள்கைகளையும் பாஜக கடுமையாக எதிர்க்கிறது.... என்று பாஜக சார்பில் கூறப்பட்டுள்ளது. (By Shyam Sundar, Published Sunday June 5,2022 (IST) டெல்-.

ஒரு குறிப்பிட்ட மத நம்பிக்கை கொண்டிருப்பவர் அதில் உறுதியாய் இருப்பது அவருடைய மன சுதந்திரம். அவர் இன்னொரு மத நம்பிக்கைபடி வாழ்பவரை குறை சொல்லவோ, எதிர்ப்பதற்கோ அவருக்கு உரிமை இல்லை. அடுத்தவரை பழித்துரைப்பதையும், வெறுத்து ஒதுக்குவதையும் மற்ற மதங்களைவிட கிறிஸ்தவ சமயம் அதிகம் சாடுகிறது.

அடுத்திருப்பவரையும், தேவையில் இருப்பவரையும், சமூகத்தில் கடைநிலைக்கு தள்ளப்பட்டவர்களையும் அன்பு செய்வதே கிறிஸ்தவ மறையின் உயர்ந்த நெறி. கிறிஸ்தவ மறையில் உறுதியான நம்பிக்கை உடையவர்கள் வாழ்வில் சமத்துவதை நிலைநாட்டுவதில் பற்றுக்கொள்வர். மதங்களையும் மொழிகளையும் கடந்து உலகில் எந்த மூலையில் வாழ்பவரையும் அன்பு செய்வதும், சேவை யாற்றுவதும் கிறிஸ்துவத்தின் பண்பு. வாழ்வில் உண்மையைத் தேடுபவர்களை வழிகாட்டும் ஒளியிடம் (இயேசுவிடம்) வழிநடத்துவது கிறிஸ்தவர்களின் கடமை. நற்செயல்களின் மூலம் ஒளிரும் நட்சத்திரங்களாக சமுதாயத்தில் திகழ்வது கிறிஸ்தவரின் அழைப்பு (மத் 5.13-16).

இன்றைய இந்திய திருஅவை கிறிஸ்தவ நம்பிக்கையில் வலுவிழந்து நிற்பது கவலைக்குரியது தன்னைப்போன்ற மனிதனை சாதிபோற்றி அவமதிப்பது இயேசுவை மீண்டும் சிலுவையில் அறைவதற்கு சமம் என்பதை உணராதிருப்பது இன்றைய கிறிஸ்தவர்களின் அவமானம். தான், தனது, சுற்றம் என்ற நிலையிலே மற்றவரை வஞ்சிப்பது கிறிஸ்தவம் போற்றும் சகோதர அன்புக்கு முரணானது.

அந்தியோக்கு நகர் இஞ்ஞாசியார் என்பவரின் பின்வரும் அறிவுரை இந்திய திருஅவை தன்னை சீர்படுத்திக் கொள்ள உதவும். “வார்த்தையிலே இயேசுவை அறிவித்து, வாழ்க்கையிலே (உள்ளத்திலே) உலகத்தை பற்றிக்கொள்வது கிறிஸ்தவர்களுக்கு அழகல்ல. நம்பச் செய்தும் போதனைகள் அல்ல, மாறாக நற்செயல் களுக்காக அது வெறுக்கப்படுவதில்தான் கிறிஸ்தவத்தின் பெருமை அமைகிறது. மறைசாட்சியத்தின் வழியாக, நான் ஒரு கிறிஸ்தவன் என்று நிறுபித்தால், உலகம் என் நேர்மையை போற்றும்.”

முதல் நூற்றாண்டின் கடைசியிலும், இரண்டாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர் அந்தியோக்கு இஞ்ஞாசியார். அவர் தியோபோரஸ் (கடவுளை போற்றுபவர் – God bearer) பற்றுள்ள கிறிஸ்தவர். எதற்காகவும் தன் மத நம்பிக்கையை சமரசம் செய்து கொள்ளாதவர் தன் நம்பிக்கையை வெளிப்படுத்த உயிரையும் துச்சமெனக் கருதியவர். “நான் கிறிஸ்தவன் என்று அழைக்கப் படுவதைவிட கிறிஸ்தவன் என்று நிரூபிப்பதை விரும்புகிறேன்” என்று வாழ்ந்தவர்.

இத்தகைய பற்றுடைய கிறிஸ்தவன் ஆட்சியாளர் களுக்கு ஆபத்தானவன் என்று கருதப்பட்டது. தன் நம்பிக்கையில் உறுதியாக இருந்தமைக்காகவே சிங்கங்களுக்கு இரையாக்கப்பட்டார். இறையாட்சியை (சமத்துவ சமுதாயத்தை) கட்டியெழுப்ப கிறிஸ்துவோடு துன்பங்களை ஏற்கவேண்டும் என்பது அவருடைய வாழ்க்கை போதனை.

வாழ்வில் செல்வம் இருந்தாலும், நிம்மதி இல்லையேல் பயனொன்றும் இல்லை. எதை இழந்தாலும் கடவுள் நம்பிக்கை இழக்காமல் இருந்தால், கலங்கியவர்களை கடவுள் கைதூக்கி விடுவார் என்பதை யோபுவின் வாழ்வில் உணர்த்துகின்றது. மார்த்தாண்ட வர்மாவின் அரசு கணக்காளியாக இருந்த நீலகண்டன் என்பவர் தன் வாழ்வின் சோதனையில் இயேசுவை கண்டுகொண்டார்.

இயேசுவை பற்றிக்கொண்ட அவர் கீழ்சாதி மக்களை தன் சகோதரராக பாவித்து பழகினார். வாழ்வில் சமத்துவத்தை கடைபிடித்தார். இவருடைய இந்த வாழ்க்கை மாற்றம் அன்றைய உயர்சாதியினருக்கு சவாலாக இருந்தது. இயேசுவை கைவிட வற்புறுத்தப்பட்டார். தண்டனைகள் உன் நம்பிக்கையை குலைக்கும் என்று அரசர் சொல்- பல சித்தரவதைகளுக்கு இலக்கானார். ஆனால் உடல் வதைகள் அவர் மனத்தை மாற்றவில்லை, அவருடைய இறைநம்பிக்கையை உறுதிபடுத்தின. தன் விசுவாசத்திற்காக உயிர் நீத்தார்.

இவர் பொதுநிலை கிறிஸ்தவர்களுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. நம்பிக்கையில் உறுதியும் வாழ்வில் சமத்துவத்தையும் நிலைநாட்ட தன் உயிரை ப-யாக்கிய இவரை இன்றைய திருஅவையினர் பின்பற்றுவது இன்றைய தேவை.



## 19-06-2022
## கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்த பெருவிழா



அருள்திரு. J. இருதயராஜ்
உதவி பங்குத்தந்தை, இருப்புக்குறிச்சி

தொ.நூ 14:18-20, 1கொரி 11:23-26 லூக் 9:11-17

**விருந்து:** அரசன் ஒருவன் தன்னுடைய மகளுக்கு பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்கிறான். ஒருவாரக் கொண்டாட்டம். நாட்டில் யாரும் எந்த வேலைக்கும் செல்லக் கூடாது. ஒருவாரக் கூ-யை அரசே அனைவருக்கும் கொடுக்கும். வாரம் முழுவதும் கலைநிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு மக்கள் அனைவரும் மகிழ்ந்திருக்க அரசன் திட்டமிட்டு செயல்படுத்துகிறார். ஒரு நாடே மகிழ்ந்து கொண்டாடிக் கொண்டிருந்தது அரசனுடைய மகளின் பிறந்த நாள் விழாவை. ஒரு வாரம் முடிந்து, பிறந்த நாள் அன்று கொண்டாட்டங்கள் இன்னும் சிறப்பு, நிறைய பரிசுபொருட்கள் கொடுக்கப்பட்டன. அப்படி எல்லாம் இனிதாய், சிறப்பாய் நடைபெற்ற பிறந்தநாள் இறுதியாக அறுசுவை விருந்தோடு நிறைவுபெற்றது. விருந்து முடிந்து வெளியே செல்லுகையில் மக்கள் மகிழ்வோடு சென்றாலும் பலர் சொன்ன வார்த்தை "இரசத்தில் கொஞ்சம் உப்பு அதிகம்" என்ற ஒரு சொல் முழு விழாவையும்? முழு கொண்டாட்டத்தையும் ஒரு பொருளற்றதாய் மாற்றிவிட்டது.

ஒரு விழா, அல்லது எந்த சிறப்புக் கொண்டாட்டமாக இருந்தாலும் அதன் நிறைவு சிறப்பான விருந்தில் அமைகிறது. அதாவது உணவு எல்லா சிறப்பு நிறைவுகளின் அடையாளம். அது மட்டுமல்ல உணவு தனி மனித, சமுதாய அடையாளமாகவும் உள்ளது. தனித்தன்மை, மகிழ்ச்சி அனைத்தும் உணவிலே நிறைவு பெறுகிறது. இதையே இன்றைய நற்செய்தியில் காணமுடிகிறது (லூக் 9:11-17).

**கிறிஸ்தவத்தின் அடையாளம்:** கிறிஸ்தவர்களாகிய நமக்கு பெருமை, தனித்துவம், மகிழ்ச்சி, சிறப்பு, தனித்துவமான அடையாளம் என்னவென்றால் நற்கருணை, இதை யாராலும் மறுக்கமுடியாது. எனவேதான் தாய் திருஅவையானது இன்று கிறிஸ்துவின் திருவுடல் திருஇரத்த பெருவிழாவை சிறப்பாக கொண்டாடுகின்றது. இந்த உணவு நமக்கு கொடுக்கிற ஆற்றலை வேறு எந்த உணவும் கொடுக்க முடியாது. அதைதான் (யோவான் 6:51-57)-ல் குறிப்பிடுகின்றார்.

- இந்த உணவை உண்டால் அவர் என்றுமே வாழ்வார்.
- இந்த உணவு உலகை வாழ்விக்கும்
- இந்த உணவினால் நாம் வாழ்வின் நிறைவை பெறுகிறோம்.
- இந்த உணவினால் நிலைவாழ்வை பெறுகிறோம்.
- இந்த உணவினால் இறுதி நாளில் உயிர்த்தெழுதலை பெறுகிறோம்.
- இந்த உணவினால் இறைவனோடு என்றும் இணைகின்றோம். இறைவனும் நம்மோடு இணைகின்றார்.

இது வெறும் உணவு அல்ல. நம்முடைய வாழ்வின் மையம்.

அதைத்தான் புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் உறுதிபடுத்துகின்றார் (1கொரி 11:23-24).

**எப்படி உட்கொள்ள வேண்டும்:** 1கொரி 11:27-28 ல் புனித பவுல் அழகாக குறிப்பிடுகின்றார்: தகுதியற்ற நிலையில் (பாவ நிலையில்-கோபம், வெறுப்பு, அகந்தை, கூடா ஒழுக்கம்) உட்கொண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால், அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராக குற்றம் புரிகிறார். எனவே ஒவ்வொருவரும் தம்மைத் தாமே சோதித்தறிந்த பின்பே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருக வேண்டும்.

**வாழ்வு தரும் உணவு:** இயேசுவின் க-லேய பின்னணியில் யோவான் நற்செய்தி ஆறாம் அதிகாரம் எழுதப்பட்டுள்ளது. ஒத்தமை நற்செய்திகளில் காணப்படும் செய்திகளை (மத் 14:13-21, மாற்கு 6:30-41, லூக் 9:10-17). இயேசுவே வாழ்வு தரும் உணவு என்று தனது கருத்திற்கு ஏற்ப யோவான் இங்கே தருகின்றார். யோவான் நற்செய்தி 6வது அதிகாரம் முழுவதும் ஆண்டவரின் உடல், இரத்தம் (நற்கருணை) நம்முடைய (கிறிஸ்தவத்தின்) தனித்துவத்தை வெளிபடுத்துவதாக அமைகிறது.

ஆக நற்கருணை என்பது இறைவன் தம் மக்களுக்கு படைக்கும் அல்லது கொடுக்கும் உயரிய விருந்து. அதில் பங்கேற்கும் அனைவரும் உயிர்த்த இயேசுவுடன் உறவு கொள்கின்றனர். அவரது உடல் இரத்தத்தின் வழியாக அவரது ஆவியை பெற்று அவரோடு ஓர் உடலாகவும் உயிராகவும் ஒன்றிக்கின்றனர். இப்படிப்பட்ட பேற்றினை பெற்றுள்ள நாம் அனைவரும் இந்த உலகில் தனித்துவம் வாய்ந்தவர்கள் என்பதில் பெருமைபடுவோம், மகிழ்ச்சிகொள்வோம்.

## நன்றி கூறுகின்றோம்



கடந்த இரு ஆண்டுகளாக சர்வவியாபிக்கு ஞாயிறு மறையுரை சிந்தனையை எழுதிய அருட்தந்தை S.**ஜான்சன்**, உதவிப் பங்குதந்தை, முகையூர் அவர்களுக்கு சர்வவியாபி ஆசிரியர், வாசக பெருமக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரின் இறைபணி சிறக்க செபிக்கின்றோம்.

– ஆசிரியர்



# செபமே வாழ்வு – வாழ்வே செபம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் யார் என்பதை உணர்ந்துவிட்டால் அவர்களின் வாழ்வு பொருள்மிகுந்த அருள் வாழ்வாக இவ்வுலகிலும் மறு உலகிலும் சுடர்விடும் என்பதை உணர்ந்து தியானித்து அறிவோம். ஒருவர் எப்படி வாழ்கின்றாரோ அப்படியே செபிக்கின்றார். ஒருவர் எப்படி செபிக்கின்றாரோ அப்படியே வாழ்கின்றார். செபத்தில் இருந்து வாழ்வைக் கற்றுக் கொள்ளலாம். வாழ்வில் இருந்து செபத்தைக் கற்றுக் கொள்ளலாம். யாரையும் எப்படியும் தீர்ப்பிடாமல் அன்புசெய்து செப வாழ்வில் வலம் வருவோம்.

**செபிக்கும் கலை:** செபவாழ்வு ஒரு கலையாகும். கலையை இரசிப்பதற்கு நாம் அனைவரும் விரும்புவதால் செபக்கலையை இரசிப்போம். ஒவ்வொருவரும் தனித்தன்மையையும் பொதுத் தன்மையையும் கொண்டிருப்பதால் தனிசெபம், குழு செபம் என செபிக்க வாய்ப்புண்டு. வாய்செபம், சிந்தனை செபம், ஆவி செபம் என மூவித செபத்தையும் மேற்கொள்ள இயலும். நமது சுவாசம், செபம், வாழ்வு மூன்றும் இணைந்திருக்கிறது. செபத்தையும் வாழ்வையும் பிரிக்க முடியாது. கடவுள் இணைப்பதை மனிதர்கள் பிரிக்காதிருக்கட்டும்.

**புறப்புலன் செபம்:** கடவுளின் படைப்பு அதிலும் அவரது சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்கள், இயேசுவால் தெளிவாக்கப்பட்டவர்கள், மெய்யாகவே இறைவனைப் போற்றி புகழ்ந்து வாழ்வது எவ்வளவு மகிழ்வுக்குரியது என்பதை அனைவரும் அனுபவித்து காண்பது மேலானது.

படைப்பு முழுவதையும் ஐந்து மூலங்கள் என்பது நம்மில் ஐந்து புலன்களாக இடம் பெற்றுள்ளது. கண், காது, நுகர்வு, தொடுவது, பேசுவது என்று பொதுவாக எல்லார்க்கும் உள்ளது. ஒருசிலர் ஐம்புலன்களில் பாதிக்கப்படுவது நமது பலவீனமாகும், பலவீனத்தை பலமாக்கி இயல்பான குழந்தைகளை இறைவனுடைய விருப்பத்திற்கு ஏற்ப பெற்றெடுப்போம். இன்றைய காலக்கட்டத்தில் பல தம்பதியர்கள் தங்களின் விருப்பத்தை நாடி விலகிச் செல்வதை மாற்றி கடவுளின் பாதையில் வாழ்க்கைப் பயணத்தை மேற்கொள்வது முக்கியம். படைப்பில் கடவுளின் பிரசன்னத்தை உணர்ந்திடு, படைப்பின் சப்தத்தில் அவருடைய குரலுக்கு செவிமடு, படைப்பை கையாள்வதில் கவனமாக இரு. படைப்பின் வாசனையை நுகர்ந்திடு, படைப்போடு பேச முயன்றிடு. இவ்வாறு வாழ்வே செபமாகும் என்பதை சுவைத்திடு.

**அகப்புலன் செபம்:** மனிதநேயமே அகப்புலன்கள் வழி மெய்ப்பிக்கபடுகிறது. விருப்பமும் சிந்தனையும் அகப்புலன்களாகும். பொதுவாக கடவுள் அனைவருக்கும் ஆரோக்கியமான சிந்தனை என்னும் இயேசு, ஆரோக்கியமான விருப்பம் என்னும் தூய ஆவியை இயேசு வழி அருளுகின்றார். மனித நேயம், சரியான சுதந்திரம், இயன்றவரை மெய்மை, சுதந்திரமாக விரும்புவது இவைகள் நம் ஒவ்வொருவரிலும் சரியாக செயல்பட்டால் நல்லது. முழுமெய்மை இறைவனிடம்தான் உள்ளது. அதில் மனிதர்களாகிய நாம் பங்கெடுக்கின்றோம். மனிதர்களிடம் முழு உண்மையும் இல்லை. இயேசுகூட தன்னில் தன்வழி வந்த உண்மையில், வர இருக்கின்ற ஆவியானவர் நிறை உண்மையயை நோக்கி உங்களை அழைத்துச் செல்வார் என்பதை புனித யோவான் நற்செய்தியின் இறுதி சொற்களாக நாம் காண்கிறோம். அகப்புலன் செபத்தில் சப்தமும் மௌனமும் இடம் பெற வாய்ப்புண்டு. இருப்பினும் நிறை செபத்தை நோக்கி பயணிக்க இவைகள் படிகள் என்பதை மறந்துவிட வேண்டாம் ஏனெனில் செபிப்பது ஆவியாகும்.

**ஆவியில் செபம்:** கடவுளின் ஆவியால் இயக்கப்படுகிற வர்களே கடவுளின் மக்கள். இறைவனிடம் வேண்டுவது என்று நமக்குத் தெரியாது. தூய ஆவியார்தாமே சொல்வடிவம் பெற முடியாத நம்முடைய பெருமூச்சுகளின் வாயிலாய் நமக்காகப் பரிந்து பேசுகிறார். நாம் சுதந்திரத்தோடு ஆவி வழியாக மூவொரு ஆவியான தந்தை, உயிர்த்த ஆண்டவர், தூய ஆவியோடு உறவு கொள்கிறோம். இவ்வாறு நம் ஆவியும், குழுவின் ஆவியும், படைப்பின் ஆவியும் இறை ஆவியோடு இணைவது ஆவியில் செபமாகிறது.

**அருங்கொடை செபம்:** என்பதை நாம் சரியாக முழுமையாகப் புரிந்துகொள்வது நல்லது. உணர்வுகளை மட்டும் மையப்படுத்தி உணர்வுகளை ஆதாயமாகப் பயன்படுத்துவது ஆரோக்கியமான அணுகுமுறை அல்ல. பல செபக் குழுக்கள் ஈசலைப்போல அங்குமிங்கும் மலர்வதை திருச்சபை சரியான முறையில் வழிநடத்த கடமையும் பொறுப்பும் உண்டு. விழிப்பாய் இல்லை என்றால் சுயநலம் என்னும் அலகை ஆவியை ஆரோக்கியமற்ற ஆவிக்கு மிக நயவஞ்சகமாக அழைத்துச் சென்றுவிடும்.

ஆவியின் செபத்தில் சப்தமும் மௌனமும் இடம் பெறுகின்றது. மௌனம் அதிகமாவது நல்லது. ஆவியின் கொடைகள் கனிகள் இவைகளை நம் சுவைக்கும் போதுதான் நல்லது. செபமும் வாழ்வும் வித்தியாசமாக இருக்க இடமில்லை, செபத்தில் சம்மனசு, வீட்டில் அலகை, சமூகத்தில் சமரசம் என்று நடிப்பதற்கு செபத்தில் இடமில்லை என்பதில் உறுதிவேண்டும்.

**புதியப்படைப்பு:** தூய ஆவியால், உயிர்த்த ஆண்ட வரின் ஆவியால், கடவுள் ஆவியால் இயக்கப்படுகின்ற வர்கள் மறு கிறிஸ்துவைப் போல இருப்பார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். “என்னைக் காண்பவன் இயேசுவைக் காண்கின்றான்” என்று தாழ்ச்சியோடும் தன்னலமின்றியும் சான்று பகர்வது முக்கியம். இப்படிப்பட்ட கிறிஸ்தவர்களையும், கிறிஸ்தவ குடும்பங்களையும், குழுக்களையும் நாம் கொண்டு இன்றைய உலகில் சான்று பகர்வது முக்கியம். இவ்வுலக மாயக் கவர்ச்சிகளுக்குக் கொஞ்சம்கூட இடமில்லை என்பதில் விழிப்பாய் இருப்போம். அலகை தோற்றத்தில் அழகான கவர்ச்சி வழியாக இறுதியில் தன் பக்கம் ஈர்த்துச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. உண்மையின் அடித்தளத்தில் சுயநலமில்லா அன்பில் நம்மை எண்பிக்க கடவுளின் அருளைத் துணையாக தூண்டுதலாகக் கொள்வோம்.

தனியொரு கிறிஸ்தவர், குடும்பம், அடிப்படை கிறிஸ்தவக் குழு, பங்கு ஆலோசனைக்குழு, மறைவட்ட மேய்ப்புப் பணிக்குழு, மறைமாவட்ட மேய்ப்புப் பணிக்குழு போன்ற அமைப்புகள் திருச்சபை சட்டப்படி அமைத்து கண்காணித்து திருச்சபையை தலத்திருச்சபைகளாக வளர்த்தெடுப்போம். பழைய அமைப்புகளை வைத்துக்கொண்டு புதியத் திருச்சபை குழுக்களைக் கட்டி எழுப்புவது முறையுமல்ல, சரி என்று நாம் அமைதி காக்கக் கூடாது. புதிய அமைப்புகளைக் கண்டிப்பாக செயல்படுத்த வேண்டும். திருஆட்சியாளர்கள் மௌனமாக இருந்தால் கிறிஸ்தவ விசுவாசிகள் குரல் கொடுத்து அமல்படுத்த ஆவனசெய்ய வேண்டும். நிதி விஷயத்தில் யாரும் தனியாக கையாண்டால் நிச்சயமாக தொல்லைகளும் பதுக்கலும் மற்ற காரியங்களும் இடம்பெறும். புதியப்படைப்பின் சிறப்பான அமைப்பில் தலைச்சிறந்தது நிதிக்குழு. திருச்சபை என்றும் புதுப்பிக்கப்பட வேண்டும் என்ற கொள்கையை மறவாது செயல்படுத்துவோம்.

# அற்புதங்களை சேகரிப்போம்



அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்
கியூரியா செயலர், பேராலயம்.

மண்ணில் போடப்பட்ட அனைத்து விதைகளும் ஒரே மண்ணைத் தின்று,

ஒரே தண்ணீரைக் குடித்து, ஒரே சூரிய ஒளியில்தான் வளர்கின்றன.

ஆனால் மாமரம் கொடுக்கும் பழத்திற்கும்,

வேப்ப மரம் கொடுக்கும் பழத்திற்கும் ருசியில் வேறுபாடு இருக்கிறது.

மனிதர்கள் அனைவரும்

ஒரே மூலத்திலிருந்து வந்தவர்கள்,

ஒரே கடவுளால் படைக்கப்பட்டவர்கள்

நாம் அனைவரும்

ஒரே நீரைத் அருந்தி,

ஒரே காற்றை சுவாசித்து,

ஒரே உலகில்தான் வாழ்கிறோம்,

ஆனால் சிலர் அற்பமான மனிதர்களாகவும், சிலர் அற்புதமான மனிதர்களாகவும் மாறுகிறார்கள்.

இது ஏன்? எவ்வாறு?

வழியில் எதை சேகரித்து நம்மில் உள்ளடக்கமாக அமைத்துக் கொள்கிறோமோ

அதைப் பொறுத்துத்தான் நம்முடைய தன்மை வெளிப்படும்.

நாம் நம் வாழ்வில் எதை சேர்க்கிறோம் அற்பத்தையா....? இல்லை அற்புதத்தையா......?

**அற்பம் என்னும் 6 குணங்கள்**

1. பேராசை
2. சினம்
3. கடும்பற்று
4. முறையற்ற பால் கவர்ச்சி
5. உயர்வு தாழ்வு மனப்பான்மை
6. வஞ்சம்

**அற்புதம் என்னும் 6 குணங்கள்**

1. நிறை மனம்
2. பொறுமை
3. ஈகை
4. கற்பு நெறி
5. சம நோக்கு
6. மன்னிப்பு



இவை அனைத்திற்கும் அடித்தளமாக உள்ள அன்பை நாம் புரிந்து கொண்டால்

அற்பம் நம்முள் எட்டிப் பார்க்காது. அற்புதம் நம்மை விட்டு என்றும் விலகாது....

சிந்திப்போம் தெளிவடைவோம்...

# தனிப்பெரும் சேவகி



(அன்னை தெரேசாவின் அதிசய வரலாறு)

(வெளியீடு: நெய்தல்வெளி, நாகர்கோவில்)

- Dr. தீபக் தாமஸ், பல் மருத்துவர், புதுவை.



அடுத்த பிரச்சினை உள்ளூரில்,
பாகிஸ்தான் – பங்களாதேஷ் போர்.
பாகிஸ்தான் படைகள்
பங்களாதேஷ்க்குள் புகுந்தன.
பங்களாதேஷ் மக்கள் தப்பித்து
கொல்கத்தாவில் புகுந்தனர்.
ஒன்றல்ல, இரண்டல்ல
இரண்டரை லட்சம் அகதிகள்.
பிதுங்கி நின்றது கொல்கத்தா.

அன்னைக்கு இப்போது பலம் அதிகம்.
பன்னாட்டு அமைப்புகளின் துணையோடு
பங்களாதேஷ் அகதிகளின் துயர் துடைத்தார்.

அடுத்து வந்த சோதனை பெரும்சோதனை.
அன்னையின் அன்னையே மரணப்படுக்கையில்.
கடைசி ஆசையாய் காணவேண்டுமென்றார் மகளை.
தெரசா துடியாய் துடித்தார்.
அன்னையிடம் சென்று அதரவு தர
அயல்தேசம் அனுமதிக்கவில்லை.
அரசியல் சூழல் அப்படி.

இறுதியில் மகளை காணாமலே
மடிந்து போனார் திரானா.

மற்றோரெல்லாம் மறிக்கையில்
மடிதந்து உதவினார் தெரசா.
ஆனால் என்ன கொடுமை!
அவர் அன்னை மடிகையில்
அருகில் இருக்க வழியில்லை.

தடுமாறித்தான் போனார் அவர் – ஆனால்
திரும்பவும் மீண்டெழுந்தார். ஆமாம்
தெரசாவுக்கு திரானா மட்டுமா சொந்தம்?
உலகம் முழுக்கவே அவருக்கு உறவினர்தாம்.
அவர்கள் துயரை பின் யார் துடைப்பது?

அன்னையின் அருங்காரியங்களில் ஒன்று
ஆண்களுக்கும் மிஷனரி அமைத்தது.
மிஷனரி பிரதர்ஸ் ஆப் சாரிட்டி
ஆண்களுக்குள் அடங்கிக் கிடந்த அன்பை
அகிலத்திற்கு வெளிச்சம் போட்டு காட்டியது.

வியட்நாம் போரில் விபரீத சூழல்
வீரத்துடன் அங்கேயே சென்று
களப்பணியாற்றினர் சகோதரர்கள்.
உலகமே அவர்களை உச்சி முகர்ந்தது.

**புனித வெரோனிக்காவின் கைக்குட்டை**
ஆசிரியர்: ஜெயராஜ் தானியேல்
மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி – 605 001
விலை ரூ.50.00
தபால் செலவு தனி



# வசந்தமாய் வாழ்வு

-அருள்பணி. M. ஜான் கென்னடி,
முதல்வர் பொறுப்பு, புனித அந்தோணியார் பள்ளி, நெய்வேலி.

## 75. மறதியும் நன்று

புத்தர் ஒருமுறை தனது போதனையில் மூடநம்பிக்கைகளைச் சாடிக்கொண்டிருந்தார். இதனால் கூட்டத்தில் இருந்த ஒருவனுக்கு கோபம் வந்துவிட்டது. காரணம் அவன் நெடுங்காலமாக மூடநம்பிக்கைகளில் மூழ்கிக்கிடப்பவன். அவன் எழுந்து வந்து புத்தரின் முகத்தில் காறி உமிழ்ந்தான். புத்தரோ சிரித்தபடி, 'அவ்வளவுதானா? இல்லை சொல்வதற்கு வேறெதுவும் இருக்கிறதா?' என்று கேட்டார். அவனுக்கு ஒன்றும் புரியாமல் அங்கிருந்து போய்விட்டான். அன்று இரவு அவனால் தூங்க முடியவில்லை. நடந்ததையே நினைத்துக்கொண்டிருந்தான்.

'நானோ அவர் முகத்தில் துப்பி அவமானப் படுத்தினேன். அவர் திருப்பித் துப்பியிருக்க வேண்டும், திட்டியிருக்கவேண்டும், அடித்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல், நான் ஏதோ சொன்னதுபோல் நினைத்துக்கொண்டு, அவ்வளவுதானா? இன்னும் ஏதாவது இருக்கிறதா சொல்வதற்கு? என்று கேட்டாரே, அதற்கு என்ன அர்த்தம்?' என்று யோசித்தான். அவனுக்குப் புரிந்துவிட்டது.

'அவர் என் மூடநம்பிக்கைகளைக் கண்டித்தார். அதனால் எனக்கு கோபம் வந்தது. அவருக்கு பதில் சொல்ல நினைத்தேன். முடியவில்லை. ஏனென்றால் என்னிடம் பதில் இல்லை. அதனால்தான் துப்பினேன். என் எச்சிலைத்தான் அவர் பேச்சாக எடுத்துக் கொண்டிருக்கிறார். அதை அவமானமாகக் கருதாமல் ஒரு பதிலாக எடுத்துக்கொண்டாரே! அவர் மீதா துப்பினேன்?' என்று அவன் வருந்தினான். விடிந்ததும் சென்று புத்தரின் காலில் விழுந்து 'என்னை மன்னித்துவிடுங்கள்' என்று கண்ணீர் வடித்தான்.

புத்தர், 'உன்னை யார் மன்னிப்பார்கள்?' என்று கேட்டார். அவன் 'நீங்கள்தான் மன்னிக்கவேண்டும். நேற்று உங்கள் முகத்தில் துப்பியவன் நான்தான்' என்றான். புத்தரோ, 'நீ யார் மீது துப்பினாயோ அவர் இப்போது இல்லை. துப்பியவனும் இப்போது இல்லை. இருவரும் நேற்றே இறந்து போனார்கள். நீயும் புது மனிதன், நானும் புது மனிதன். அப்படியிருக்க நீ யாரிடம் மன்னிப்புக் கேட்பாய். நான் யாரை மன்னிப்பேன். அது நடக்காத காரியம்!' என்றார்.

நாம் கணந்தோறும் மாறிக்கொண்டிருக்கிறோம். பழையனக் கழிதலும் புதியனப் புகுதலும் உலகிலும், நம்முள்ளும் எப்போதும் நடந்துகொண்டே இருக்கிறது. நமக்குள் மாற்றம் நடக்கும்போது பழைய மனிதன் இறந்து, புதிய மனிதன் பிறக்கிறான். இந்த புரிதல் நமக்கு வந்துவிட்டால், நடந்ததை நினைத்து கவலைப்பட்டு வருந்திக்கொண்டிராமல், வாழ்வில் அடுத்த நிலைக்குக் கடந்து சென்றுகொண்டே இருப்போம்.

பல நேரங்களில் நம்மை ஒருவர் திட்டியிருக்கலாம், அடித்திருக்கலாம் அல்லது ஏதேனும் துன்பம் தந்திருக்கலாம். அப்படி, யாரோ.. என்றோ.. செய்த தீங்கை மறக்காமல் மனதில் வைத்துக்கொண்டு துன்பப்படுகிறோம். 'தீங்கு விளைவித்தவனை பழிக்குப்பழி வாங்குவேன்' என்று கறுவிக்கொண்டே இருக்கிறோம். இதனால் நம் மன அமைதி போகும், உடல் நலன் கெடும். இவ்வாறு நம்முடைய நிம்மதியை, மகிழ்ச்சியை நாமேக் கெடுத்துக் கொள்கிறோம். இது நமக்கு நாமே கொடுத்துக்கொள்ளும் தண்டனை. மாறாக அதை அப்போதே மறந்துவிட்டு நிம்மதியாக இருப்பதே நன்று. 'தீமை செய்தவனும், செய்யப்பட்டவனும் காலத்தால் இறந்துவிட்டார்கள்' என்று புத்தர் காட்டிய வழி எத்துனை அற்புதமானது.

ஒரு சிறிய சம்பவம், ஒரு சின்ன உறுத்தல் நம் மனதை தொல்லைப்படுத்திக் கொண்டு இருக்கிறதென்றால் அதை அப்போதே மறந்துவிடுதல் நன்று. ஏனென்றால் சம்பவங்களின் தீவிரம் அல்லது கனாகனம் காலப்போக்கில் அடியோடு மாறத்தான் போகிறது. எப்படியும் அதை நாம் மறக்கத்தான் போகின்றோம். அதை இப்போதே மறந்துவிட்டால் என்ன? இப்போதைய மகிழ்ச்சியில் அவை தலையிட நாம் ஏன் அனுமதிக்க வேண்டும்? காலம் கடந்தும் நடந்ததையே நினைத்துக்கொண்டிருப்பது, ஆறிப்போன புண்ணை மீண்டும் கீறிவிடுவது போலத்தான். "ஒரு மனிதன் நிகழ்ந்துவிட்ட சம்பவத்தால் புண்படுவதைவிட, அச்சம்பவத்தைப் பற்றி தான் கொள்ளுகின்ற அபிப்பிராயத்தாலேயே அதிகம் புண்படுகிறான். எனவே மடுவை மலையாக்காதீர்கள்" என்று பிரெஞ்சு தத்துவஞானி மான்டெயின் குறிப்பிடுகிறார்.

கடந்த காலத்தை எத்தனை முறை நினைவுபடுத்திக் கொண்டாலும் அதை நாம் மாற்றப்போவது இல்லை. தவிர்க்க முடியாததை ஏற்றுக் கொள்ளுவது மனித சமுதாயத்தின் மிகப்பெரிய சாதனை. நிகழ்ச்சிகளின் மீது நமக்குக் கட்டுப்பாடு இல்லை என்பதை உணர்கின்ற போது, ஏற்றுக் கொள்ளுவதின் மூலம் அதன் விளைவுகளின் மீது ஒரு கட்டுப்பாட்டினை நம்மால் கொண்டுவர முடியும்.

கடந்த காலத்தில் நிகழ்ந்துவிட்ட மகிழ்ச்சி அளிக்காத விஷயங்களில் இருந்து உணர்ச்சிப்பூர்வமாக நாம் விடுபடவேண்டும். அதற்கு நடந்ததை மறந்து கடந்து செல்லுதல் அவசியம். மகிழ்ச்சி அளிக்காத விஷயங்களை மறக்கத் தூண்டும் இயல்புடையதுதான் நம் மனம். அதற்கு நாம் உதவியாக இருந்தாலே போதும், மறதி தானாக நிகழும். முழுமையாகவும் சீக்கிரமாகவும் மறக்கக் கூடிய சுபாவம் உடையவராக நாம் இருந்தால் நம்முடைய மகிழ்ச்சிக்கும், நம்மை சார்ந்தவர்களின் மகிழ்ச்சிக்கும் அது பேருதவியாக இருக்கும்.

வசந்தம் வீசும்....



15

# ஆன்மிகமும் பக்தியும்

Dr.Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.



## நான் பாவி...

கடவுள் முன்னால் நான் பாவி என்ற ஆன்மிக அனுபவம் பெற்றவர்கள் ஆன்மிகத்தில் விரைவாக முன்னேறுவர். மேலும் அவர்களுடைய வாழ்வின் பாதையே திசைமாறி விடுவதும் உண்டு. நிம்மதியாகத் தன் தொழிலைச் செய்து வாழ்ந்து வந்த பலருடைய நிம்மதியைக் கலைத்து அவர்களைக் கொண்டு பெருங்காரியங்களை இறைவன் ஆற்றியுள்ளார். எடுத்துக்காட்டாக புனித சவேரியார், புனித அகுஸ்தீனார், புனித சார்ல்ஸ் தெ ஃபுக்கோ, புனித தேவசகாயம் பிள்ளை மற்றும் பலர். இறைவார்த்தை நம் நிம்மதியைக் குலைக்கலாம். ஒருவருடைய நல்ல செயல் நம்மைக் கேள்விகளால் துளைத்தெடுக்கலாம். ஆலயத்தில் காது கொடுத்துக் கேட்ட ஓர் உரை நம் வாழ்க்கையையே தடம் புரளச் செய்யலாம்.

இந்த அனுபவத்துக்குப் பின் **“மனம் வருந்தி மனம் மாறுங்கள்”** என்ற இயேசுவின் போதனை சீமோனுக்கு நன்றாகப் புரிந்திருக்கும். தன் பாவ நிலையை உணராத ஒருவரால் இயேசுவின் அருகில் செல்லமுடியாது. ஆனால் பாவியாக இருப்பவர் செல்லலாம். அதே சமயம் இயேசுவின் அருகில் சென்றவர்களுக்குத்தான் தன் பாவநிலை தெரியும்.

தன்னைக் குழப்பநிலையில் விட்ட இந்த இயேசு தன்னைவிட்டு அகல வேண்டும் என்று விரும்புகிறார் சீமோன். கடவுளை நேருக்கு நேர் சந்தித்தவர்களின் நிலை இது. சீமோன் இயேசுவின் கால்களில் விழுகிறார். அருகில் வலைநிறைய மீன்கள் துடித்துக்கொண்டிருக்கின்றன. அதைவிட சீமோனின் இதயம் துடிக்கிறது. **“ஆண்டவரே! பாவியாகிய என்னைவிட்டு அகன்று செல்லும்.”**

இயேசு சீமோனைத் தேற்றுகிறார்: “**அஞ்சாதே!** இன்று முதல் நீ மனிதர்களைப் பிடிப்பவனாய் இருப்பாய்.” மனிதர்களைப் பிடிக்கச் சிறந்த வலை குழப்பநிலையில் இருந்து பெறும் ஆன்மிகம். நிம்மதியான மனநிலையல்ல.

இந்த சீமோனுக்குத்தான் “பேதுரு” அதாவது பாறை என்று இயேசு பெயரிட்டார். இயேசு ஏன் தன்னைத் தேர்ந்தெடுத்தார் என்று பேதுருவால் புரிந்துகொள்ள முடியவில்லை. உள்ளூர் ரபியைத் தேர்ந்துகொள்ளவில்லை. கப்பர்நாகுமுவில் உள்ள ஒரு பக்திமானைத் தேர்ந்து கொள்ளவில்லை. கடவுள் கணிக்கும் முறையே தனி. அவருக்கு முக்கியமானதாகத் தோன்றுவது மனிதனுக்கு முக்கியமானதாகத் தோன்றுவதில்லை. மனிதன் முக்கியத்துவம் தரும் பல காரியங்கள் கடவுள் முன் அற்பமானவை.

நாம் மறையுரைகளில் நம் மனதுக்கு இதமான வார்த்தைகளை, நாம் செய்வதும் வாழும் முறையும் “நன்று” என்ற சான்றிதழ் போதகர் வாயினின்று வராதா? என்று நாம் தேடுவதில்லையா?

மேலும் பன்னிரு சீடர்களை இயேசு தேர்ந்துகொண்டார். இவர்களை ஒருநாள் உலகம் முழுவதும் தன் போதனையை எடுத்துச் செல்ல தயாரிக்கப் போகிறார். அன்றுமுதல் தன் போதனையை ஊர் ஊராகச் சென்று மக்களுக்கு அளிக்கிறார். அப்போது அவர் கையாண்டமுறை மக்களைக் கேள்வி கேட்டுச் சிந்திக்க வைப்பது.

நமது தியானத்தில் நமக்கே கேள்விகள் எழாதபோது இயேசுவின் கேள்விகளில் ஒன்றையோ சிலவற்றையோ எடுத்துக்கொள்ளலாம்.

**“நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்கவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?** (லூக் 2:49)

இது இயேசுவின் முதல் கேள்வி. தன் தாயிடமும் வளர்ப்புத் தந்தையிடமும் கேட்கப்படுகிறது. இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்டால் என்ன பதில் சொல்வோம். நாமும் கடவுளைத் தேடுகிறோம். அவர் கிடைப்பதில்லை, மேலும் பதில் எதுவும் சொல்வதில்லை.

மரியன்னையும் யோசேப்பும் ஆலயத்துக்குச் சென்று இயேசுவைத் தேடினார்கள். நாம் எங்கு சென்று கடவுளைத் தேடுகிறோம்? நாம் தேடுவதில்லை. கடவுள் அங்கு இருக்கிறார் என்று நமக்குத்தான் தெரியுமே! எனவே நேரே அவரிடம் வேண்டியதைக் கேட்கிறோம். அவ்வளவு நம்பிக்கை நமக்கு! ஆனால் கடவுளிடம்தான் நம் தேவையைக் கேட்கிறோமா அல்லது நமக்கு என்ன தேவை என்பதைக் கடவுளுக்குப் புரியவைப்பதில் கவனமாக இருக்கிறோமா?

நாம் தேடாதபோது நம்மைப் பார்த்து இயேசு” ஏன் என்னைத் தேடுகிறீர்கள்” என்று கேட்கப் போவதில்லை. ஒரு சிலர் அவரைத் தேடி வருகின்றனர். காணாமல் போன ஒருவரைத் தேடுவது வேறு, உதவி பெறுவதற்காகத் தேடி வருவது வேறு. அவர்களுக்கும் இயேசு அதே கேள்வியைக் கேட்கலாம். அப்போது இயேசுவின் கேள்வியையே பதிலாக ஏற்றுக்கொள்ளலாமா? “ஏன் என்னைத் தேடினீர்கள்?”

அவர் தம் தந்தையின் அலுவலில் ஈடுபட்டிருக்கிறார். அந்த நேரத்தில் நமது தேவையை அவரிடம் கூறலாமா? நமது தேடலின் காரணம் மிக அற்பமானதாக இருக்கலாம். தந்தை உலகில் ஆற்றவேண்டிய அலுவல் ஏராளம். அவ்வாறு இருக்க நமது மிகச் சிறிய தேவைகளுக்காகக் கடவுளைத் தேடும்போது இந்தக் கேள்வியை நம்மிடம் கேட்கலாம் அல்லவா?

தந்தையின் அலுவலின் பட்டியலில் நம் தேவைகளும் இடம் பெறாதா? நிச்சயமாக இடம் பெறும். அவற்றை நிறைவேற்ற வேண்டிய நேரத்தில், நிறைவேற்ற வேண்டிய முறையில் அவர் கட்டாயம் நிறைவேற்றுவார். நாம் எதிர்பாராத விதத்தில் நிறைவேற்றுவார். நாம் கேட்கத் தயங்கும் கொடைகளையும் நமக்கு வழங்குவார். வியக்கத் தக்கவிதத்தில் நிறைவேற்றுவார்.

உதாரணமாக திருப்பாடலில் ஒரு வசனத்தை வாசிக்கிறோம்: “கழுகுதன் குஞ்சை இறக்கையின் மீது அமர்த்திப் பறப்பதுபோல...”அதாவது தன் குஞ்சுக்குத் தீங்கு விளைக்கக் கூடிய எந்த எதிரிக்கும் எட்டாதபடி கழுகு மிக உயரத்தில் பறந்துவிடுகிறது. என்ன அருமையான உதாரணம்! அப்படி நம்முடைய எல்லா எதிரிகள் கைகளுக்கும் எட்டாத இடத்தில் கடவுள் நம்மை உயர்த்தி வைப்பார். உயிர்களைக் காப்பதும் தந்தையின் அலுவல் அல்லவா?

தொடரும்



# யார் போட்ட பிச்சை

- திரு. அல்போன்ஸ் மோசஸ்-புதுச்சேரி-9.

அந்த பங்கில் பேரவைக்கூட்டம் நடைபெற்றது. "சுவாமி எல்லா ஊர் கோவிலிலும் மணி சொல்லி விவிலிய வாசகங்கள் ஒலி பெருக்கியில் ஒலிபரப்பும் வசதி செய்யப்பட்டுள்ளது. நமது ஊரிலும் அவ்வாறு செய்தால் தினமும் விவிலிய வாசகங்கள் கேட்பது மக்களுக்கு ரொம்ப பிரயோசனமாக இருக்கும்'' என்றார் செயலர்.

"அதற்குப் பணம் நிறையத் தேவைப்படுமே. ஊர்த் திருவிழா வேற வரப்போகிறது. இப்ப கொஞ்சம் சிரமம்தான். பிறகு பார்த்துக் கொள்ளலாம்'' என்றார் பங்குதந்தை.

அந்த கூட்டத்திற்கு வந்திருந்த தோமினிக், "சாமி அந்த செலவை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள். நான் வாங்கித் தரும் அந்த கருவியில் என் பெயரைக் எழுதி வைக்க அனுமதிக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

பங்குத்தந்தை அவரிடம், "நீர் உமது பெயரை அந்தக் கருவியில் பொறிக்க வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்வதன் காரணத்தை நான் அறிந்து கொள்ளலாமா?'' என்று கேட்டார். அதற்கு அவர் "அது மற்றவர்களுக்கு தூண்டுகோலாக அமையும். நாமும் இதைப்போல செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும்'' என்றார்.

"நீர் சொல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. இன்று இந்த கருவியில் உமது பெயரை எழுத அனுமதித்தால் நாளை வேறொருவர் ஒரு மின் விளக்கைத் தந்து விட்டு அதில் தனது பெயரை எழுத வேண்டும் என்று கூறுவார். நானும் மறுக்க முடியாது. அது அப்படியே நீண்டு கொண்டே போய் கடைசியில் யேசுவின் பெயரையே இது மறக்கச் செய்து விடும்.

நீதான் அந்தக் கருவியை வாங்கிக் கொடுத்தாய் என்பதை நான் கோவிலில் நான் அறிவிக்கும்போது அனைவருக்கும் தெரியவரும். அதுவே போதும். இதை நீ ஒப்புக் கொள்ளவில்லையென்றால் நீ ஒன்றும் வாங்கித்தர வேண்டாம்'' என்றார்.

ஒரு கையால் கொடுப்பது அடுத்த கைக்குக்கூட தெரியக்கூடாது என்று வாழ்பவர்களும் உள்ளனர். ஆனால் எல்லாவற்றிலும் தனது பெயர் இடம்பெற வேண்டும் என்று ஆசைப்பட்டு பலகையில் பெயரைச் செதுக்கி வைப்பவர்கள் பலர் உள்ளனர்.

இந்த உலகில் நாம் வாழ்வதே இறைவன் நமக்குப் போட்ட பிச்சை. அதிலிருந்து கொஞ்சம் எடுத்து அவருக்கே கொடுத்து அதிலும் உரிமை கொண்டாடி பெயரை எழுதிக் கொள்வது எந்த விதத்தில் நியாயம்.

நமது பெயர்கள் எழுத வேண்டிய இடம் இது அல்ல. நற்கிரிகைகளைச் செய்து இறைவன் பராமரித்து வரும் அழியாத வாழ்வின் புத்தகத்தில் நம் பெயர் இடம் பெறச் செய்வோம்.

# நல்ல மனசு

திரு. ஜெயராஜ் தானியேல்,
முத்தியால்பேட்டை, புதுவை-3



குணசேகரன் அந்தக் கிராமத்திலேயே பெரிய பணக்காரர். அவருக்கு நான்கு ஆண் பிள்ளைகள் ஒரேயொரு பெண் பிள்ளை. குழந்தைகளை அதிகம் நேசித்ததனால் செல்லம் கொடுக்க வேண்டியதாயிற்று. அளவுக்கு மீறி செல்லம் கொடுத்ததால் ஆண் பிள்ளைகள் கெட்டுக் குட்டிச்சுவராகிப் போயினர். மகள் நன்றாகப் படித்தும், படிப்பை நிறுத்தி விட்டு திருமணம் செய்து வைத்தார். அவள் 200 கிலோமீட்டர் தொலைவில் உள்ள ஒரு கிராமத்தில் வாழ்ந்து வந்தாள். அவளைத் திருமணம் செய்து கொடுத்த பொழுது தந்தை ஏற்கனவே சொத்தெல்லாம் இழந்திருந்தார். இருப்பினும் அந்தப் பெண், ஏழை விவசாயியான தன் கணவன் வீட்டில் அமைதியாக மகிழ்ச்சியாக குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாள்.

ஒரு நாள் குணசேகரன் அவளைப் பார்க்க வந்தார். அவளிடம், ''பிரம்பைக் கையாளாதவர் தம் மகனை நேசிக்காதவர். மகனை நேசிப்பவரோ அவனைத் தண்டிக்க தயங்க மாட்டார்'' என்று திருவிவிலியத்தில் சொல்லப்பட்ட நீதிமொழியின்படி (நீதிமொழிகள்13:24) "உன் அண்ணன்களை வளர்க்கத் தவறி விட்டேன்'', என்று சொல்லி வருந்தினார். வறுமையிலும் தன் மகள் மகிழ்ச்சியாக வாழ்வதை நினைத்து பெருமிதம் அடைந்தார்.

எப்படி இவர்களால் மகிழ்ச்சியாக வாழ முடிகிறது? என்று நினைத்தவர் மருமகனிடம் கேட்டும் விட்டார். அதற்கு மருமகன், "மாமா, எனக்கு இருப்பது இந்த இரண்டு ஏக்கர் தரிசு நிலம் தான். இதில் பயிரிட்டு விளைவதை வைத்தே வாழ்க்கையை நடத்த வேண்டியிருக்கிறது. கஷ்ட ஜீவனம் என்று சொல்வதற்கில்லை. வாய்க்கும் கைக்குமாய் சரியாகப் போகிறது. ஆனாலும் எனக்கு வேறெந்த ஆசையும் இல்லை. எல்லோரும் நல்லா இருக்கணும்னு தான் தினமும் வேண்டிக் கொள்கிறேன். இந்த ஒரு ஆசை தான் என்னை நல்லபடியாக வாழச் செய்கிறது. ''அடுத்திருப்பவன் நன்றாக வாழவில்லையென்றால் உங்களால் எப்படி நன்றாக வாழ முடியும்? யோசித்து வாழுங்கள் என்ற எங்களுடைய பங்குத்தந்தையின் அறிவுரையை நான் மறப்பதேயில்லை.'' என்று சொன்ன மருமகனை நினைத்து பெருமையடைந்தார் குணசேகரன்.

சில வருடங்கள் கழித்து குணசேகரன் இறந்து விட்டார்.

"அப்பா போய்ட்டாருனு கவலப்படாதீங்க. என்னோட தோட்டத்தில நீங்களும் நானும் சேந்து ஒழைச்சு வெளயிற காய்கறி, கனிகளை சந்தையில கொண்டு போய் வித்து நாம எல்லாருமா பங்கிட்டுக்கலாம்,'' என்று தன் மைத்துனர்களிடம் யோசனை தெரிவித்தார்.

"இதுல வெளயிறத வச்சு ஒங்க குடும்பத்த நடத்தவே கஷ்டப்படுறீங்க. இதுல நாங்க வேற ஒங்களுக்கு சொமயா? எப்படி மச்சான்...'' என்று தயங்கினார்கள்.

"அதெல்லாம் ஒண்ணுமில்ல. நாம எல்லாரும் சேந்து ஒழச்சா விதவிதமா சந்தைக்கு ஏத்தாப்ல வெளய வைக்கலாம்'' என்றார் மைத்துனர்.

எல்லோரும் சம்மதித்து, நன்றாக உழைத்து பருவத்துக்கேற்றவாறு விதைத்து விதவிதமான காய்கறி மற்றும் கனிகளை அறுவடை செய்து சந்தைப்படுத்தி நல்ல லாபத்திற்கு விற்று நிறைவாக வாழ்ந்தார்கள்.

## விண்ணக வாழ்வின் முதல் ஆண்டு நினைவு அஞ்ச–

பிறப்பு 13-05-1929



இறப்பு 04-06-2021

### FLORA LOUIS

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வர்" - யோவான் 11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 04-06-2022 மதியம் 12.00 மணிக்கு, புதுவை திரு இருதய ஆண்டவர் பசி–க்காவில் திருப்ப– நிறைவேற்றப்பட்டது. இதை காணும் அனைவரும் அன்னாரின் ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மகன்: L.E.LUCIEN (எ) ADRIAN
மருமகள்: சாந்தி லூசியன்,
பேரப்பிள்ளைகள், கொள்ளுப்பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்.

### வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சர்வவியாபியின் ஆண்டு சந்தா புதுப்பிக்கும் போது மணியார்டர் படிவத்தில் முக்கியமாக உங்கள் **சந்தா எண்ணை** மறக்காமல் குறிப்பிடவும். **2022-23** ஆண்டிற் கான சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும்.

**ஆண்டு சந்தா ரூ. 200**


### புனித வெரோணிக்காவின் கைக்குட்டை

ஆசிரியர்:
ஜெயராஜ் தானியேல்

விலை
ரூ.50.00

தபால் செலவு தனி

மிஷன் அச்சகம்
196, மாதா கோவில் வீதி,
புதுச்சேரி - 605 001


## விண்ணக வாழ்வின் 26-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 08-09-1951



விண்ணில்:20-06-1995

**திருமதி.A.ஆரோக்கியமேரி,** M.A.,B.Ed.Tr.

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" யோவான்.11:25

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 20-6-2022 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு விழுப்புரம், கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

கணவர் : A. உபகாரசாமி, ஆசிரியர்
மகன் : U. ஜோ அந்தோணி
மருமகள்: J. ஜோன் ஆப் ஆர்க்;
பேத்தி : ஆமி
மருமகன்கள் : அம்புரோஸ் முடியப்பன், U.S.A. சாந்தி அம்புரோஸ்
திரு.I.பெலிக்ஸ் விஜயன், Tr. U.U.M. வசந்தி, Tr
பேரன்கள்: ஜெப்ரிசாம், பெனட், U.S.A. ஆர்வின், உஜேஷ், மற்றும் உறவினர்கள்.







திருமதி. **எட்விஜ் சந்திரா நேரு**

மண்ணில் பிறப்பு : 17-10-1940
விண்ணில் இறப்பு : 15-06-2002

*உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான் 11:25*

## விண்ணக வாழ்வின் 20–ஆம் ஆண்டு நினைவு அஞ்ச–

### செபம்

அன்பின் ஆண்டவரே! இரக்கத்தின் உருவான இயேசுவே! மண்ணக வாழ்வில் மறைந்தாலும் அன்புக்கும் அமைதிக்கும் சான்றாக, எங்களை அரவணைத்து வழிகாட்டி வாழ்ந்து அமைதியில் மரித்து எங்களை மீளா துயரில் ஆழ்த்தி எங்கள் மனதில் என்றென்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் எங்கள் அன்பு தெய்வம்

திருமதி. **எட்விஜ் சந்திரா நேரு**

அவர்கள் இப்பூவுலகை விட்டு உம் திருவடி சேர்ந்த இருபதாம் ஆண்டு நினைவாகிய இந்நாளில் அவரது ஆன்மா உம்மில் அமைதி பெற மன்றாடுகிறோம் ஆமென்.

– (கர்.மங்.திரி.)

பிரிவால் துயருறும்
திரு. **ரொபேர் தர்ம–ங்கம்**
**மகன்கள், மகள், மருமகள்கள், மருமகன்**
**மற்றும் பேரப்பிள்ளைகள்.**

**நினைவு திருப்ப–:**

15-06-2022 புதன்கிழமை காலை 6.00 மணிக்கு ரெட்டியார்பாளையம், புனித அந்திரேயா ஆலயத்தில் நடைபெறும் திருப்ப–யில் பங்கெடுத்து இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்க வேண்டுகிறோம்.

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்ச–











**தோற்றம்**
**17-07-1978**

**மறைவு**
**14-06-2021**

**திரு. S. மணிபாலன், B.Com., BL**

“இவரே ஆண்டவரிடம் ஆசி பெறுவார், நேர்மையாளர் எனத் தீர்ப்பு பெறுவார்” – திபா 24:5

**வானக தந்தையே! அன்பின் இறைவா! இம்மண்ணக வாழ்வில் உம்மை நேசித்து உமக்கு பிரமாணிக்கமாய் வாழ்ந்து எங்களையும் வழி நடத்திவிட்டு விண்ணக வாழ்வில் பங்கேற்க உம்மால் அழைக்கப்பட்ட உமது அடியார் அவர்களின் ஆன்மா நித்திய இளைப்பாற்றியை அடைய அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம். - ஆமென்.**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 14-06-2022, காலை 10.30 மணிக்கு செஞ்சி வட்டம், பொன்பத்தி கிராமம், குழந்தை தெரேசம்மாள் ஆலயத்தில் நிறைவேற்றப்படும் திருப்ப–யில் கலந்துகொண்டு அன்னாரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

நான் உன்மேல் வைத்திருக்கும் அன்பு என் உயிர் இருக்கும்வரை மாறாது,
பிரிவால் வாடும்
மனைவி: M. **அனுசுயா**
மகள்கள்: M. **அக்ஷயா,** M. **அனுஷ்கா**
**குடும்பத்தினர்கள் மற்றும் நண்பர்கள்.**

# 13-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி







**தோற்றம்**
**13-06-1941**

**மறைவு**
**15-06-2009**

## திருமதி. இரத்தினக்கண்ணு (எ) அந்தோணியம்மாள் சாந்து

**"அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர் பெற்று எழுகிறது." (1கொரி.15:42)**

அன்பு கொண்டே அனைவரையும் அரவணைத்தாய்!
பண்பு கொண்டே பாசத்தைப் பொழிந்தாய்!
இரத்தினக்கண்ணு (எ) அந்தோணியம்மாள் சாந்து!
அணையா விளக்காய் – நீர்
இறவாமல் வாழ்கின்றீர் எங்கள் உள்ளத்தில்!

அன்பின் பாசத்தை அருவியாய் கொட்டினீரே! என்றுமே,
இறை வாழ்வின் வெற்றிவாகை சூட நதியாக ஓடினீரே!
குன்றாத மலையாய் நின்றீரே, குடும்பத்திற்கே என்றுமே
பல்கலைக் கழகமாய் உயர்கல்வியில் வளர்த்தீரே!

அன்பே! உள்ளத்தில் வைத்து அனைவரையும்
ஆட்கொண்ட நீ அணையா விளக்காக எங்கள்
உள்ளத்தில் வாழ்ந்தாலும் இறைமகன் யேசுவின் அணையா
ஒளியில் அமைதியாய் என்றும் வாழ வேண்டுகிறோம்!

குடும்ப செபம் செபிப்பதிலும் ஆர்வமுடன்
புண்ணிய தலங்களுக்கு குடும்பமாய் செல்வதிலும்
பக்தியாய் இருந்து விசுவாசத்தை வளர்த்தீர்
உந்தன் பராமரிப்புகளையும் அன்பினையும் மறக்க முடியுமா.

**"தாயே உத்தரிக்கும் தலத்தோர்க்கு ஓயா தஞ்சமும் ஆதரவும் நீயே"**

**திருமதி. இரத்தினக்கண்ணு (எ) அந்தோணியம்மாள் சாந்து**

அவர்களின் ஆத்தும இளைப்பாற்றிக்காக 15-06-2022 **புதன்கிழமை** 16-06-2022 **வியாழக்கிழமை** காலை 6.00 மணிக்கும், புதுவை, புனித ஜென்ம இராக்கினி அன்னை பேராலயத்திலும், 16-6-2022 பகல் 12.00 மணிக்கு திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவிலும், 16-6-2022 காலை 6.00 மணிக்கு முத்தியால்பேட்டை புனித ஜெபமாலை அன்னை ஆலயத்திலும் திவ்ய பலிபூசை நிறைவேற்றப்படும். அம்மையாரின் ஆத்தும இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளவும்.

பிரிவால் துயருறும்

**அம்மையாரின் கணவர், பிள்ளைகள்,**
**குடும்பத்தினர், உறவினர்கள், பேரன், பேத்திகள், கொள்ளுபேத்தி, கொள்ளுபேரன்**
**மற்றும் நண்பர்கள், பணியாளர்கள்.**

82,ரங்கப்பிள்ளை வீதி, புதுச்சேரி - 605 001.

# புனித பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி – 226

**ஜூன் மாத வெளியீடு**

அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ் - தாராபுரம்



வாரம் தவறாமல் 116 ஆண்டுகளாக மலர்ந்து வரும் சர்வவியாபி இதழின் நறுமணத்தை முழுமையாக முகர்ந்து அனுபவித்து வரும் வாசகர்களுக்கு ஜெபம் நிறைந்த வாழ்த்துக்கள். ஓய்வு நாள் ஏற்படுத்தப்பட்டது மனிதனுக்காக மனிதன் படைக்கப்பட்டது கடவுளுக்காக, ஆகவே மனிதன் இறைவனை சிறப்பாக வழிபடவே ஒய்வுநாள் தரப்பட்டுள்ளது. வெறுமனே வேலை செய்யாமல் இருப்பதற்காக அல்ல. நம்மைப் பொறுத்தமட்டில் ஞாயிற்றுக்கிழமை இறைவனின் நாள் ஓய்வுநாள் நமது அன்றாட வேலைக்கு மட்டுமே இறைபணிக்கு அல்ல, ஓய்வுநாளில் தான் ஓய்வே இல்லாமல் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். வழக்கமாக நாம் என்ன செய்கின்றோம்? வாரம் முழுவதும் செய்ய முடியாத வீட்டு வேலைகளை ஞாயிற்றுக் கிழமைக்கு ஒதுக்கி வைத்து விடுகிறோம். காலை திருப்பலியில் பங்கெடுப்பதோடு ஞாயிறு கடன் முடிந்து விட்டதாக நினைக்கிறோம். ஆனால் ஞாயிறுக்கிழமை ஆண்டவரின் நாள் என்பதை மறந்து விடுகிறோம். வாழ்நாள் முழுவதும் ஆண்டவருக்குத்தான், ஆயினும் அவர்தனக்கென்று ஒதுக்கி நம்மிடம் தந்த நாளை அவருக்காக மட்டும் வாழ்வது தான் நல்லது என்பதை உணர்ந்து வாழ கற்றுக்கொள்வோம். இறைவன் நம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறை ஊழியன்
அருட்சகோதரர் அ.மே.ஜேம்ஸ்

**குறிப்பு**

1. பதில்களை 10.07.2022 க்குள் அனுப்பி வைக்கவும்.
2. பதிலை அதிகாரம் வசனத்துடன் சரியான முகவரியுடன் எழுதி அனுப்பவும்.
3. மதிப்பெண்கள் அடிப்படையில் குலுக்கல் முறையில் முதல் 10 நபர்களுக்கு பரிசுகள் ஜுலை மாதம்15ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கப்படும்.
4. ஒவ்வொரு மாதமும் பரிசு வழங்க விருப்பம் உள்ளவர்கள் முன் கூட்டியே எனது அலைபேசி எண்களுக்கு தெரியப்படுத்தவும்.

**இடமிருந்து வலம்**

1. எக்காலத்திலும் அவனது ____________ மலர்ந்திருக்கும்
2. ____________ கொண்ட வழிப் போக்கனைப் போன்று
9. பகைவர்களை நினைவு கூர்ந்து ____________ அனுப்பினார்.
11. உனக்கு ஓர் ____________ மட்டும் இருந்தால்
16. ____________ களைச் சிந்தித்துப் பார்ப்பார்கள்.
19. உன் ____________ ஆயத்தம் செய்து கொள்.
25. வழி மரபு வழியாக மக்களினங்களுக்கு ஆசி ____________.
28. ____________ அமைத்தார்கள்.

**வலமிருந்து இடம்**

3. ____________ வாங்கலுக்கு இடையே பாவம் நுழைந்து கொள்கிறது.
5. ____________ தவிர்த்திடு, உன் பாவங்கள் குறையும்.
8. உயரமான இரட்டைச் சுவருக்கு ____________ நாட்டினார்.
12. ஆரோனின் ____________ மிகுதிப்படுத்தினார்..
14. ஆண்டவருடைய ____________ ஆறுபோலப் பெருக்கெடுக்கிறது.
17. அவனை உன் சகோதரன் போல ____________.
18. ____________ தூயவராக்கித் தம் அருகில் வைத்துக் கொண்டார்.
20. ____________ உரிய காலத்திற்கு முன்பே முதுமையை வருவிக்கும்.
21. கவலை ____________ விழிப்பு ஆழ்துயிலைக் கெடுக்கிறது.
26. மன்னருக்கு அவருடைய ____________ வெளிப்படுத்தினார்.
27. விளக்கங்கள் ______ வற்றைக் கேட்டு நாடுகள் வியப்படைந்தன.

**மே-ருந்து கீழ்**

4. உன் கண்முன் அவர்கள் தேன் ____________ பேசுவார்கள்.
10. நீர் ____________ கொள்வீர் என்று எழுதப்பட்டுள்ளது.
13. இரக்கம் என்பது நலமிகு ____________ போன்றது.
22. ____________ முடிவை நினைத்துப்பார்.
23. அவதூறு, கும்பல், குற்றச்சாட்டு இவை மூன்றும் சாவினும் ____________.

**கீழிருந்து மேல்**

6. தன் கூரைக்கு அடியில் வாழும் ஏழையின் வாழ்வே ____________.
7. மாண்புக்குப் பதிலாக ____________ தருவர்.
15. அவர்களுடைய நினைவு ____________.
24. அவர்கள் கைதிகளாக ____________ கடத்தப்பட்டு.
29. என் உயிர் ____________ நெருங்கி வந்தது.

**சீராக் - 25 முதல் 50 அதிகாரங்கள்**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | | 3 | 2 | | |
| 9 | | | 6 | ■ | | | | 5 | 4 |
| | 10 | | | 8 | | | | 12 | |
| ■ | | | | | 18 | 14 | | 13 | |
| | | | 21 | 19 | | | 29 | | |
| 22 | | | | 17 | | ■ | 23 | | ■ |
| | | ■ | | | 20 | 11 | | | ■ |
| 16 | | | | | 7 | | | | 27 |
| ■ | 15 | 28 | | | | 24 | | | 26 |
| 25 | | | | | | | | | ■ |

**பதில் அனுப்ப வேண்டிய முகவரி**

அருட்சகோதரர் அ.மே. ஜேம்ஸ் **M.A.,MA.,B.Ed**
(தலைமை ஆசிரியர்)
தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப்போட்டி - 226
புனித மிக்கேல் துறவற சகோதரர்கள் இல்லம்,
தாராபுரம், திருப்பூர் மாவட்டம் - 638 656.
**Cell : 99423 11068, 95979 75430**

**Published and Printed by Very Rev. Msgr. A. Arulanandam on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, D.D.,D.C.L.,**
Archbishop of Pondicherry & Cuddalore. Printed at Mission Press, 196, Cathedral Street, Puducherry - 605 001.
Published from Mission Press, 196, Cathedral Street, Puducherry-605 001. Editor: Very Rev. Msgr. A. Arulanandam. Manager : Very Rev. Msgr. A. Arulanandam.